# உதவியுடன் மீள்பயணம்

உங்களுக்கு நோர்வேயில் வதிவிட அனுமதி இல்லையாயின், நீங்கள் தாய் நாட்டுக்குத் திரும்பிச் செல்வது அவசியம். நாடு திரும்புவதற்கு உதவிகோரி நீங்கள் விண்ணப்பித்து ஒரு புதுவாழ்வை அங்கு தொடங்கலாம்.

## பின்வரும் காரணங்கள் பொருந்தினால் நீங்கள் உதவியுடன் மீள்பயணத்துக்கு விண்ணப்பிக்கலாம்:

- அகதி அந்தஸ்து அல்லது வதிவிட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்தால்
- விண்ணப்பத்திற்கான பதிலை எதிர்பார்த்திருந்தால்
- நோர்வேயில் சட்டபூர்வ அனுமதியின்றி இருந்தால்

## எவ்வகையான உதவிகளைப் பெறலாம்:

- பொருளாதார மற்றும் நடைமுறை உதவி
- கடவுச்சீட்டு மற்றும் பயணப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள உதவி
- விமான நுளைவுச்சீட்டு
- நோர்வேயிலுள்ல குடிபெயர்வு அமைப்பினால் (IOM) வழங்கப்படும் ஆலோசனை

## எவ்வகையான பொருளாதார உதவியைப் பெறமுடியும்?

- நாட்டைவிட்டு வெளியேறவேண்டிய கால அவகாசம் முடிவதற்கு முன் அல்லது இவ்வாறான அவகாசம் விதிக்கப்படுமுன் விண்ணப்பிக்கப்படுமிடத்து, 20 000 குரோணர் உங்களுக்கு வழங்கப்படும்.

- கால அவகாசம் முடிவடைந்தபின் விண்ணப்பிக்கப்படுமிடத்து, 7 000 குரோணரும், ஒவ்வொரு குழந்தைக்கும் (உதவியுடன் மீள்பயணம் செய்ய விண்ணப்பிக்கும் போது 18 வயதுக்கு குறைவாக இருப்பின்) 2000 குரோணரும் வழங்கப்படும்.

கால அவகாசம் முடிவடையும் முன்னர் விண்ணப்பிக்கும் குடும்பங்களுக்கு, அவர்கள் திருப்பிப் போகும்போது ஒவ்வொரு குழந்தைக்கும் 10 000 குரோணர் மேலதிக உதவித்தொகையாக வழங்கப்படும்.

**பின்வருமாறு நீங்கள் விண்ணப்பிக்கலாம்**

IOM ஐ இலவசமாக தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்: 800 37 484 அல்லது மின்னஞ்சல் முகவரி iomoslovarp@iom.int

www.iom.no இல் விண்ணப்பப்படிவத்தைப் பெறலாம்